
# வஞ்சகத்தை எதிர்ப்போம் ! வளமான தமிழ்நாட்டைக் காப்போம் !

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி


மறைமலையடிகள்


சோமசுந்தர பாரதியார்


கி.ஆ.பெ.விசுவநாதம்


பட்டுக்கோட்டை அழகிரி


மூவலூர் ராமாமிர்தம்


நடராசன்


தாளமுத்து

வேளையில், திராவிட முன்னேற்றக் கழக மாணவரணியின் முன்னெடுப்பில், பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த மாணவர் அமைப்பினர் ஒன்றிணைந்து, தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்கள் அனைத்திலும் பேரணியாகச் சென்று, ஒன்றிய அரசின் அலுவலகங்களின் முன்பாக, மும்மொழிக் கொள்கையையும் – இந்தித் திணிப்பையும் – யு.ஜி.சி. விதிமுறைகள் திருத்தத்தையும் எதிர்த்து கண்டன முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்திய செய்திகளை தொலைக்காட்சிகள் வாயிலாகப் பார்க்க முடிந்தது. ஆதிக்க இந்திக்கு எதிராக ஆர்ப்பரித்து எழுந்திருக்கிறது தமிழ்நாட்டின் மாணவப் பட்டாளம்.

> **நாம், தமிழர் என்பதைக் காட்டுவது தமிழ்மொழிதான். இதற்கு ஆபத்து வந்துவிட்டால் நமது ஒற்றுமை, கலை, நாகரிகம் யாவும் நாசம். ஆகவே தமிழைக் காப்பாற்றுங்கள்” என்று தந்தை பெரியாரின் தளபதியான பேரறிஞர் அண்ணா அறைகூவல் விடுத்தார்.**

**தாய்மொழியாம் தமிழைக் காத்திட ஊர்தோறும் மாணவர்களுடன் மாணவிகளும் பங்கேற்க நடந்துள்ள எழுச்சிமிக்க கண்டனப் பேரணி , அன்று ‘தமிழர் பெரும்படை’ என்ற பெயரில் அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரியும்- மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும் முன்னின்று திருச்சி முதல் சென்னை வரை நடத்திய நெடும்பயணத்தை நினைவூட்டுவதாக இருந்தது.**

ஒன்றிய அரசின் அலுவலகங்கள் முன்பாக தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு நடத்திய கண்டனப் பேரணி என்பது, சென்னை சௌகார் பேட்டை இந்து தியாலாஜிக்கல் பள்ளியின் முன் 1938ஆம் ஆண்டு நவம்பர் 14 அன்று ஆண்களும் பெண்களுமாக நடத்திய ஆர்ப்பாட்டத்தின் இன்றைய பதிப்பு போல் இருந்தது. அப்போது நடந்த போராட்டத்தில் டாக்டர் தர்மாம்பாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், மலர் முகத்தம்மையார், பட்டம்மாள், சீத்தம்மாள் ஆகிய 5 பெண்களும் கைது செய்யப்பட்டனர். இவர்களில் சீத்தம்மாள் தனது மூன்று வயது மகள் மங்கையர்க்கரசி, ஒரு வயது மகன் நச்சினார்க்கினியன் ஆகியோருடன் கைதாகி சிறை சென்றார் என்பது திராவிட இயக்கத்தின் தியாக வரலாறு.

ஆண்-பெண் பேதமின்றி தமிழ்மொழி காத்திட சிறைபுகுந்த மன உறுதிமிக்க அந்தப் போராட்ட உணர்வு இன்றைக்கும் தேவைப்படுகிறது என்பதை ஒன்றிய பா.ஜ.க அரசின் தொடர்ச்சியான தமிழ் விரோதச் செயல்பாடுகள் எடுத்துக் காட்டுகின்றன. 1938ஆம் ஆண்டு தொடர்ச்சியாக நடந்த இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் கழக முன்னோடியான என்.வி.நடராசனின் துணைவியார் புவனேஸ்வரி, தன் கைக்குழந்தையான சோமசுந்தரத்துடன் கைதாகி சிறை சென்றார். அந்தக் குழந்தை சோமசுந்தரம்தான், பின்னாளில் என்.வி.என்.சோமு என அறியப்பட்ட கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்திய ஒன்றிய இணையமைச்சராகவும் இருந்தவர்.

> **பிறக்கும்போதே தாய்ப்பாலுடன் தமிழ்ப்பாலும் சேர்த்து ஊட்டப்பட்டவர்கள் நாம்.**

**பிறக்கும்போதே தாய்ப்பாலுடன் தமிழ்ப்பாலும் சேர்த்து ஊட்டப்பட்டவர்கள் நாம். இறக்கும் வரையில் தமிழ் உணர்வு அழியாது. தமிழை அழிக்க நினைப்பவர்களையும் விடமாட் டோம்.**

இன்னொரு மொழிப்போர் நம் மீது திணிக்கப்பட்டால், 1937ல் தொடங்கி 1939 வரை நடந்த முதல் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில், தமிழைக் காப்பதற்காக சிறைக் கொடுமைக்குள்ளாகி, உடல்நலிவுற்ற நிலையிலும் மன்னிப்பு கேட்க மறுத்து, தன் இன்னுயிர் ஈந்த நடராசன், தாளமுத்து எனும் மாவீரர்களை நெஞ்சில் ஏந்தி, களம் புகுவோம். சட்டத்தின் முன்பும் நீதியின் முன்பும் தாய்மொழி உணர்வை நிலைநாட்டி, தமிழைக் காப்போம்.!

மொழிப்போரில் தந்தை பெரியார் அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்ட போது, நீதிமன்றத்தில் அவர் வழக்காடவில்லை. அதிகாரத்தில் இருப்பவர்களின் ஆணவப் போக்கையும், சட்டத்தை வளைக்கக்கூடிய சக்திகளின் செயல்பாடுகளையும் தன் துணிவுமிக்க வார்த்தைகளால் அடையாளம்காட்டிவிட்டு, நீதிபதியைப் பார்த்து பெரியார் சொன்னார், “கோர்ட்டார் அவர்கள் திருப்தி அடையும் வகையில் தங்களால் எவ்வளவு அதிக சிறைத் தண்டனையைக் கொடுக்க முடியுமோ அவைகளையும், பழிவாங்கும் உணர்ச்சி திருப்தி அடையும் வகையில் சிறையில் எவ்வளவு தாழ்ந்த வகுப்பு கொடுக்க இடமுண்டோ அதையும் கொடுத்து இவ்வழக்கு விசாரணை நாடகத்தை முடித்துவிடும்படி வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன். **எவ்வளவு நியாயமான இலட்சியத்தை அடைய வேண்டுமானாலும் அதற்காக கஷ்ட நஷ்டத்தை அடைதல் எனும் விலையைக் கொடுத்தே ஆக வேண்டும்”** என்றார் துணிச்சலாக!

அன்று தந்தை பெரியார் சொன்னதைத்தான் பின்னாளில் பேரறிஞர் அண்ணா சொன்னார். அதன்பின் முத்தமிழறிஞர் கலைஞர் சொன்னார். சொன்னபடி செய்தார்கள் நம் தலைவர்கள். ஆதிக்க மொழிகளிடமிருந்து தமிழைப் பாதுகாத்தார்கள். இருமொழிக் கொள்கையால் பள்ளிக் கல்வி, உயர்கல்வி, திறன் மேம்பாடு, சிறப்பான வேலைவாய்ப்புகள் எனத் தமிழ்நாடு இன்று உயர்ந்து நிற்கிறது.

> **ஆண்பெண் பேதமின்றி தமிழ்மொழி காத்திட சிறைபுகுந்த மன உறுதிமிக்க அந்தப் போராட்ட உணர்வு இன்றைக்கும் தேவைப் படுகிறது.**

**தாழ்ந்த தமிழகத்தை நிமிர்த்தி உயர்த்தியது திராவிட இயக்கம். தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் வஞ்சகத்தைத் தொடர்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசாங்கம்.**

வஞ்சகத்தை எதிர்த்திடவும், வளமான தமிழ்நாட்டைப் பாதுகாத்திடவும், மாநில உரிமைக்கான குரலுடன் தாய்மொழி காத்திடும் முழக்கத்தையும் முன்னிறுத்துவோம். ஆதிக்க மொழியால் இந்திய மொழிகள் பல அழிக்கப்பட்ட வரலாற்றைப் பார்ப்போம்.!

(தொடரும்)

அன்புடன்

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 13
25.02.2025.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்!

## காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியத்தில் பொதுக்கூட்டம்!

### க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! அத்திப்பட்டு சாம்ராஜ் – வழக்கறிஞர் யாசர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், பிப். 26 - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி காஞ்சிபுரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திராவிடமாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மாபெரும் பொது கூட்டம் மற்றும் இந்தியை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் 27.2.2025 வியாழக் கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு ஆசூர் ஊராட்சியில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத்தலைவர் த.கன்னியப்பன்தலைமைவகிக்கிறார் கம்பராஜபுரம் கே. எம்.ஆர்.க.குமணன் வரவேற்று பேசுகிறார். ஆசூர் ஊராட்சி கிளை கழக செயலாளர்கள் வ.தனசேகரன், எ.உமாபதி, எ.ராஜா பாதர், சு.தணிகைமலை, ம.முத்து, ந.சரவணன், த. நீலமேகன், கு.சுனில்குமார், மோ.தினேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., அத்திபட்டு சாம்ராஜ், வழக்கறிஞர் யாசர் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். ப.அப்துல்மாலிக், பிரபுகஜேந்திரன், கெ.ஞானசேகரன், டி.குமார், பி.சேகர், என்.எஸ்.பாரிவள்ளல்,என்.பாண்டியன், அ. யுவராஜ், த.சஞ்சய் காந்தி, பெ.மணி, புஞ்சபூ.வில்வன், இ.அசோகன், திவ்யபிரியாஇளமது,டி. அசோக்குமார்,எம்.குமார், எஸ்.நந்தகுமார், டி.எல். தயாளன், ந.வீரராகவன், முனியம்மாள் ராஜகோபால், கோ.கமலக்கண்ணன், ஏ.கே.பரசுராமன், தொ.தட்சிணா மூர்த்தி, வே.திருநாவுக்கரசு மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

க.இளமது நன்றி கூறுகிறார்.


ஒன்றிய பா.ஜ.க. அரசின் மும்மொழிக்கொள்கைகளை எதிர்த்தும் கட்டாய இந்தி திணிப்பை எதிர்த்தும், திருவாரூரில் நடைபெற்ற பிரமாண்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில மாணவரணி துணை செயலாளர் மன்னை. த.சோழராஜன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பகலவன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், ஆயிரக்கணக்கான பள்ளி கல்லூரி மாணவிகள், கல்வி ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

---

### “அநாதை மொழியான இந்தி, ஆதி மொழியான தமிழை ஆள நினைக்கலாமா?” எனப் பதிவு!

## ஒன்றிய அரசு கல்வி நிதி விடுவிக்காததை கருத்தில் கொண்டு கன்னியாகுமரி சிறுமி ஜாக்லின் ரோஸ் - ரூ.5 ஆயிரம் நிதி!

### துணை முதல்வருக்கு அனுப்பி வைத்தார்!

சென்னை, பிப்.26- ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு விடுவிக்க வேண்டிய கல்வி நிதியை விடுவிக்காததைக் கருத்தில் கொண்டு கன்னியாகுமரியைச் சேர்ந்த ஐந்தாம் வகுப்பு சிறுமி ஜாக்லின் ரோஸ் தனது சேமிப்பிலிருந்து தமிழ்நாடு கல்வித் துறைக்கு ரூ.5,000/- வழங்குவதாக கூறி வீடியோ பதிவிட்டு துணை முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

குமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்தாம் வகுப்பு பயிலும் சிறுமி ஜாக்லின் ரோஸ் என்ற மாணவி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஒரு வீடியோ பதிவை அனுப்பியுள்ளார்.

அந்த வீடியோவில் சிறுமி ஜாக்லின் ரோஸ் இந்தித் திணிப்பை எதிர்த்து கருத்துகள் கூறுவதாக அமைந்திருக்கிறது.

அந்த சிறுமி கூறியுள்ள செய்திகள்:

“அநாதை மொழியான இந்தி மொழி, எம் ஆதி மொழியான தமிழ் மொழியை ஆள நினைக்கலாமா? இந்தி மொழியை என்றும் எதிர்ப்போம்! தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழ் - இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர். தமிழே அறம், தமிழே உயிர். ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய கல்வி நிதியை வழங்கவில்லை என்றால் என்ன. இதோ நான் எனது சிறு சேமிப்பிலிருந்து ரூ.5,000/-ஐ தமிழ்நாட்டு கல்வித்துறைக்கு மகிழ்வோடு வழங்குகிறேன். தமிழ் வாழ்க” என்று பதிவிடப்பட்ட வீடியோவை துணை முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார்.





மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (25.02.2025) நேரு பூங்கா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில். பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளி மாணவியர் உலக தற்காப்புக் கலை வரலாற்றில் முதல்முறையாக கராத்தே பயிற்சியில் நான்கு மாத பயிற்சியில் (White Green) முதல் நிலை வெள்ளைப் பட்டையில் இருந்து, மூன்றாம் நிலை பச்சை பட்டைக்கு தேர்வாகி உலக சாதனைப் படைத்தனர். இந்நிகழ்ச்சியில், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த. விசுவநாதன், மாமன்ற உறுப்பினர்கள் பரிதி இளம்சுருதி, ஏழுமலை, சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முனைவர் நீலமேகம், ஆர்த்திகா நிமலன், பாஸ்கரன், முரளி, செல்வராஜ், சுப இளவரசன், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.